# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

இலக்கம் 20, வோட் பிளேஸ்
கொழும்பு 07.

2013.10.06

**ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் : 11/2013**

பல்கலைக்கழக உபவேந்தர்கள்

வளாக அதிபதிகள்

நிறுவகப் பணிப்பாளர்கள்

**பல்கலைக்கழகக் கட்டமைப்பின் நிறைவேற்று / கல்விசார் உதவிப் பணியாளர்கள் / சுகாதார நிலையங்களில் பணிபுரியும் வைத்தியர்கள் / பல் வைத்தியர்களுக்கு முதுமாணி / தொழிற் தகைமைகளைப் பெற்றுக்கொள்வதற்காக கற்கை விடுமுறை வழங்கல்.**

மேற்குறிப்பிட்ட விடயம் சம்பந்தமாக ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள கீழ் குறிப்பிடப்படும் சுற்றறிக்கைகள் மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

1990.05.02 ஆம் திகதிய 440 ஆம் இலக்க ஆணைக்குழு சுற்றறிக்கையின் 3(iii) ஆம் பந்தி
1994.03.21 ஆம் திகதிய 601 ஆம் இலக்க ஆணைக்குழு சுற்றறிக்கை
2002.11.08 ஆம் திகதிய 809 ஆம் இலக்க ஆணைக்குழு சுற்றறிக்கை
2010.09.27 ஆம் திகதிய 931 ஆம் இலக்க ஆணைக்குழு சுற்றறிக்கை
2010.10.25 ஆம் திகதிய 936 ஆம் இலக்க ஆணைக்குழு சுற்றறிக்கை

நிர்வாக மற்றும் ஏனைய பதவிநிலை உத்தியோகத்தர்களின் தொழிற் தகைமைகளை மேம்படுத்துவதற்கான அவசியம் சம்பந்தமாகக் கவனத்திற்கொண்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அதன் 872 ஆவது கூட்டத்தில், கீழ் குறிப்பிடப்படும் உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு (905 ஆம் இலக்க சுற்றறிக்கையில் வகைப்படுத்தப்பட்டிருக்கும் பிரகாரம்) தமது அலுவல்களுக்கு நேரடியாகச் சம்பந்தப்படும் முதுமாணிப் பட்டம் / தொழிற் தகைமைகளை பூர்த்தி செய்துகொள்வதற்காக அவர்களது சேவைக் காலத்தினுள் ஒரு முறை மாத்திரம் முழுச் சம்பளத்துடனான இரண்டு (02) வருடக் கற்கை விடுமுறை பெற்றுக்கொடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

- நிர்வாகப் பணி அலுவலர்கள்
- கணக்காளர் / கணக்காய்வு அலுவலர்கள்
- சட்டம் மற்றும் ஆவணப்படுத்தல் அலுவலர்கள்
- நூலக சேவை அலுவலர்கள்
- பொறியியலாளர் சேவை அலுவலர்கள்
- கல்விசார் உதவி அலுவலர்கள்

- வைத்தியர்கள் மற்றும் பல் வைத்திய உத்தியோகத்தர்கள்

மேலும், 905 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் ஏனைய பதவிநிலை அலுவலர் பிரிவுக்குட்படும் ஊழியர்களுக்கு, முதுமாணிப் பட்டம் / தொழிற் தகைமைகள் என்பன அவர்களது பதவி உயர்வுக்கான தகைமையாகக் கருதப்படும் சந்தர்ப்பங்களின்போது இந்த இரண்டு வருடக் கற்கை விடுமுறையை வழங்க முடியும்.

மேலும், நிதி மற்றும் கணக்காய்வுப் பிரிவுகளில் பணியாற்றும் அலுவலர்கள், தமது தொழிற் தகைமையைப் பூர்த்திசெய்து கொள்வதற்காக, உறுப்புரிமையைப் பெற்றுக்கொள்ளும் வரையிலான இடைநிலை / இறுதிப் பரீட்சை அல்லது அதற்குச் சமனான பரீட்சைக்கான தகைமையைப் பெற்றதன் பின்னர் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் அல்லது அதற்குச் சமனான எற்றுக்கொள்ளப்பட்ட ஏனைய தொழில் நிறுவனங்களில் செயன்முறைப் பயிற்சியைப் பூர்த்தி செய்வதற்கான வாய்ப்புக் கிடைப்பதுடன் அதற்காக இந்தக் கற்கை விடுமுறையை பெற்றுக்கொள்ள முடியும். ஆனாலும், ஏதேனுமொரு தொழில் நிறுவனமொன்றில் உறுப்புரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான தொழில் அனுபவத்தைப் பூர்த்தி செய்துகொள்வதற்கு அல்லது பரீட்சைகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்காக இந்த கற்கை விடுமுறையை வழங்கக் கூடாது.

கீழே குறிப்பிடப்படும் நிபந்தனைகளின் கீழ் மேற்கூறப்பட்ட ஊழியர் பிரிவுகளுக்கு கற்கை விடுமுறை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

i. ஏற்புடைத்தாகும் ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் ஊழியரை பதவியில் உறுதிப்படுத்துவதற்கு முதுமாணிப் பட்டம் / தொழிற் தகைமைகள் அவசியமெனின் மட்டுமே தகுதிகாண் காலத்தினுள் இந்த கற்கை விடுமுறையைப் பெற்றுக்கொடுக்க வேண்டும்.
ii. அவ்வாறான முதுமாணிப் பட்டம் / தொழிற் தகைமைகள் பதவியில் உறுதிப்படுத்துவதற்கு அவசியமற்ற சந்தர்ப்பங்களின்போது அந்த உத்தியோகத்தர்களை பதவியில் உறுதிப்படுத்தியதன் பின்னர் இந்த கற்கை விடுமுறையைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.
iii. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு / குறிப்பிட்ட உயர் கல்வி நிறுவகத்துடன் உரிய முறையில் பிணைமுறி மற்றும் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடல் வேண்டும்.
iv. கற்கை விடுமறையினைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர் உரிய முதுமாணிப் பட்டம் / தொழிற் தகைமைகளைப் பூர்த்தி செய்வதற்காகப் பெற்றுக்கொண்ட கற்கை விடுமுறை முடிவடைந்தவுடன் அவர் ஓய்வு பெறுவதற்கு பத்து (10) வருடங்களுக்கு முன்னர் அதாவது உத்தியோகத்தரின் ஐம்பதாவது (50) பிறந்த தினத்திற்கு முன்னர் மீண்டும் கடமைக்கு சமூகமளிக்க வேண்டும்.
v. நிறுவனத்தின் அல்லது குறிப்பிட்ட நபரின் தேவைக்கு ஏற்ப உரிய பிரிவுத் தலைவரின் தற்துணிபின் பிரகாரமே கற்கை விடுமுறையைப் பெற்றுக்கொடுப்பதற்கான முன்னுரிமை வரிசை தீர்மானிக்கப்படும்.
vi. ஏழு வருட விடுமுறையுடன் இணைத்து கற்கை விடுமுறையைப் பெற்றுக் கொடுக்கலாகாது.
vii. கற்கை விடுமுறையைப் பெற்றுக்கொள்ளும் அலுவலர்கள் தாம் பணிபுரியும் பல்கலைக்கழகங்கள் / உயர் கல்வி நிறுவகங்களில் முதுமாணிக் கற்கையை மேற்கொள்ளக் கூடாது.

இந்தச் சுற்றறிக்கையின் பிரகாரம் அலுவலர்கள் கற்கை விடுமுறைகளைப் பெற்றுக்கொள்ளும்போது 2010.02.05 ஆம் திகதிய 920 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் மற்றும் ஏனைய ஏற்புடைத்தாகும் திருத்தங்களும் அமுல்படுத்தப்படுவதுடன் ஒப்பந்தம் மற்றும் பிணைமுறியிலும் அவர்கள் கைச்சாத்திடலும் வேண்டும்.

அதன்படி, 1990.05.02 ஆம் திகதிய 440 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கையின் 3(iii) ஆம் பந்தி மற்றும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள், அச் சுற்றறிக்கைளின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள கற்கை விடுமுறைகளுக்கு எவ்விதப் பாதிப்புக்களும் ஏற்படாதவாறு இரத்துச் செய்யப்படுகின்றது.

1990.05.02 ஆம் திகதிய 440 ஆம் இலக்க ஆணைக்குழு சுற்றறிக்கையின் 3(iii) ஆம் பந்தி
1994.03.21 ஆம் திகதிய 601 ஆம் இலக்க ஆணைக்குழு சுற்றறிக்கை
2002.11.08 ஆம் திகதிய 809 ஆம் இலக்க ஆணைக்குழு சுற்றறிக்கை
2010.09.27 ஆம் திகதிய 931 ஆம் இலக்க ஆணைக்குழு சுற்றறிக்கை
2010.10.25 ஆம் திகதிய 936 ஆம் இலக்க ஆணைக்குழு சுற்றறிக்கை

இதன் பிரகாரம், நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பணிவாய் வேண்டுகின்றேன்.

**ஒப்பம்: பேராசிரியர் ஷனிக்கா ஹிரிம்புரேகம**

தலைவர்

**பிரதிகள்:-**

1. செயலாளர், உயர் கல்வி அமைச்சு
2. தலைவர் அலுவலகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
3. உப தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
4. உறுப்பினர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
5. செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
6. பீடாதிபதிகள்
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்
8. கணக்காளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
9. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள் (Bursars)
10. நூலகர்கள், சிரேஷ்ட உதவி நூலகர்கள், உதவி நூலகர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள்.
11. பிரதிப் பதிவாளர்கள் / சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள் / உதவிப் பதிவாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் / வளாகங்கள்
12. பிரதி நிதிப் பொறுப்பாளரகள் / சிரேஷ்ட உதவி நிதிப் பொறுப்பாளர்கள் / உதவி நிதிப் பொறுப்பாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் / வளாகங்கள்
13. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர்கள்
15. உயர் கல்வி நிறுவகங்களின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள் / உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
16. சகல தொழிற்சங்களினதும் செயலாளர்கள்.
17. கணக்காய்வாளர் நாயகம்.

கோப்பு இலக்கம் : UGC/HR/6/4/16